**பொரலஸ்கமுவ நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 23 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொரலஸ்கமுவ நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பட்டோலையின் பிரகாரம் வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 21,812,725 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றிக்களில் ரூபா 21,709,752 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 325,000 பெறுமதியான 10 தையல் இயந்திரங்கள் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீளளிப்புச் செய்யப்படாத நிலுவை சம்பளம் 928,706 தொகையை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி திணைக்களத்தினால் (மே.மா.) வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு முரணாக ரூபா 1,283,380 தொகை பதிவழிக்கப்பட்டமையினால் நிலுவையாக இருந்த மீதி ரூபா 354,674 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (iv) | உள்ளூராட்சி திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு சபைக்கு வழங்கப்பட்ட கம்பெக்டர் வாகனத்திற்கான 03 தவணைப் பணம் ரூபா 1,142,000 அறவிடப்பட்டதன் பின்னர் முத்திரை வருமானம் ரூபா 9,503,765 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக முத்திரை வருமானம் ரூபா 1,142,000 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 06 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அவைகளுக்குரிய பட்டோலைகள் / அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது நிதிக்கூற்றுக்களில் ரூபா 264,026 தொகை அதிகரித்தும் ரூபா 1,807,367 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 8,519,509 தொகையான 03 கணக்கு விடயங்கள் அதாவது, நிகழத்தக்க பொறுப்புக்கள் ரூபா 76,850 தொகை மற்றும் நானாவித வைப்புக்கள் ரூபா 8,432,659 தொகைகளுக்கான பட்டோலைகளும் முற்கொடுப்பனவு முற்பணம் ரூபா 10,000 தொகைக்கான பற்றுச்சீட்டுக்களும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிகழத்தக்க சொத்துக்கள் மற்றும் நானாவித வைப்புக்களுக்காக பட்டோலைகள் எதிர் காலத்தில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படும். முற்கொடுப்பனவு முற்பணத்திற்கான பட்டோலை காணப்படாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகள் | ரூபா 42,655 தொகையான கடன் மீதியை தீர்த்து வைக்காத உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற கடன் மீதியை கடன் காரர்களிடம் இருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்தமையினால் பதிவழிப்பதற்கு 2020.02.07 ஆம் திகதிய கடிதம் மூலம் உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடன் மீதிகளை மோசடி செய்ததற்கான வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | | |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 333,024 தொகையை மீளச் செலுத்த வேண்டிய வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 76,870,331 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,245,030 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 27,510 | 26,919 | 26,150 | 17,036 | 26,525 | 25,772 | 22,760 | 16,872 |
| (ii) | வாடகை | 1,961 | 2,162 | 2,237 | 431 | 1,961 | 990 | 1,042 | 178 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 652 | 378 | 378 | - | 702 | 2,041 | 2,118 | 202 |
| (iv) | ஏனைய வருமானம் | 59,618 | - | 44,488 | 51,749 | 48,431 | - | 51,962 | 2,026 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிட்டையிடப்பட்ட ஆதன வரி வருமானத்தில் ரூபா 18,331,392 | சிட்டையிடப்பட்ட ஆதன வரி | சிட்டையிடப்பட்ட ஆதன வரி |

| | | | |
|---|---|---|---|
| | தொகை ஆண்டின் போது அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானத்தில் நடப்பாண்டில் 70 சதவீத அளவு அறவிடப்பட்டுள்ளது. இறுதி காலாண்டிற்குரிய (நடப்பாண்டு) ஆதன வரி அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மூலம் அடுத்துவரும் ஆண்டின் முதலாவது மாதத்தின் முதலாவது காலாண்டில் அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படுகின்றமையினால் அனேகமாக இறுதி காலாண்டில் ஒரு பகுதி நிலுவையாக காணப்பட்டது. |
| (ஆ) | முன்னைய ஆண்டின் இறுதியில் ஆதன வரி கடன்பட்டோர் மீதி ரூபா 16,871,802 ஆக இருந்த போதிலும், அதில் ரூபா 9,342,704 தொகையை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | நிலுவை ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவசர இடர் நிலைமையின் பின்னர் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (இ) | ரூபா 50,000 தொகையை விஞ்சிய 08 நிலுவை ஆதன வரி அலகுகளில் இருந்து ரூபா 535,089 நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவையாக காணப்பட்ட பட்டோலைகளின் பதிவேடுகளின் பிரகாரம் பேணிச் செல்லப்பட்ட ஆதனங்களில் ஆதன வரி அறவிடப்பட்டிருந்ததுடன் , இரண்டு இடங்களில் காணப்படுகின்ற நிலுவை தொகையை பகுதியாக செலுத்துவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தமையினால், அதன் பிரகாரம் நிலுவையை சேகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், |

| | | | |
|---|---|---|---|
| | | | சட்ட ரீதியாக அறவிடுவதற்கு முடியாத ஆதனங்களை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஈ) | 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய சீடீ.2/3/101 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டு ஆதன வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது கடந்த கால வாடகையும் கணிப்பிடப்பட்டுள்ளது. கொவிட் - 19 காரணமாக மார்ச் மாதம் முதல் பிரதேசங்களில் அளவிடல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது. |

## 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடை வாடகை உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 02 இன் பிரகாரம் வாடகை செலுத்துவதற்கு ஒரு மாத்திற்கு மேற்பட்ட தாமதம் ஏற்படுமாயின் கடையின் உரித்து இழக்கப்படுவதாக குறிப்பிடப்பட்ட போதிலும், 10 கடைகளில் இருந்து 03 மாதம் முதல் 15 மாதங்கள் வரையான காலம் ரூபா 116,214 தொகையான கடை வாடகை அறவிடப்படாதிருந்த போதிலும், உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 03 மாதங்களுக்கு மேற்பட்ட நிலுவையை அறவிடுவதற்காக இறுதி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்த துடன், எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | கடை வாடகை உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 12 மற்றும் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை கடை வாடகை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2009 ஆம் ஆண்டின் பின்னர் | உடன்படிக்கையின் நிபந்தனை மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படிக்கையை நாளது வரையாக்குதல் மற்றும் வாடகையை திருத்துவதற்காக வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தமையினால் உடன்படிக்கையை |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணங்களை திருத்துவதற்கோ அல்லது உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | நாளது வரையாக்குதல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலொன்றை கோரி உடன்படிக்கை நாளது வரையாக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | கடை வாடகை உடன்படிக்கை 03 வருடங்களுக்கு ஒரு தடவை புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 04 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையான காலம் 38 கடை உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை 03 வருடங்களுக்கு ஒரு தடவை புதுப்பிக்கப்பட வேண்டும். | உப வாடகைக்கு வழங்குவதற்குரிய உள்ளூராட்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுன் இது தொடர்பாகவும் உரிய அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 189,200 நிலுவை வியாபார வரியை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | நிலுவை வியாபார வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது நடாத்தப்படுகின்ற இடங்களில் இருந்து வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், மூடப்பட்டுள்ள நிலையங்களின் நிலுவை மீதியை சட்ட ரீதியாக அறவிடுவதற்கு முடியாதிருந்த நிலுவை வருமானமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா 36,000 தொகையான நிலுவை வரியை அறவிடுவதற்காக 39 வியாபாரங்களுக்கு வழக்குத் | நிலுவை வியாபார வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை | நிலுவை வியாபார வரியை அறவிடுவதற்காக பிணக்குகள் தீர்க்கும் |

| | | |
|---|---|---|
| தொடரப்பட்டிருந்த போதிலும், நடப்பாண்டு வரை நிலுவை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

### 2.2.5 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நுகேகொட தெல்கந்த காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2018 யூன் வரை கிடைக்க வேண்டிய முத்திரை வருமானம் ரூபா 30,851,525 ஆக இனங்காணப்பட்ட போதிலும், 2018 யூலை முதல் 2019 திசெம்பர் வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2018 யூலை முதல் 2019 திசெம்பர் வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்கானப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட முத்திரை வருமானமான ரூபா 41,416,273 தொகைக்குரிய பட்டோலைகள் மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 2019 ஆம் ஆண்டின் போது சபை அதிகார பிரதேசத்தில் பிரிக்கப்படாத கழிவுப் பொருள் 6938.28 தொன் ஆக இருந்ததுடன் கழிவுப் பொருட்களை சேகரித்தல் சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்படாமையினால் கலப்பு கழிவுப் பொருளுக்காக ரூபா 4,162,968 தொகை மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கழிவுப் பொருள்களை சேகரித்தல் சரியான பிரகாரம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப் பொருட்களை வகைப்படுத்துதல் தொடர்பாக விசேட அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டமும் கழிவுப் பொருள் சந்தை நிகழ்ச்சித் திட்டமும் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு பொது மக்களுக்கு அறிவித்த போதிலும் கழிவுப் பொருள்களை வேறுபிரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | | தொடர்பாக மக்கள் மிகவும் மந்த நிலையில் உள்ளனர். |
| (ii) | 2019 சனவரி முதல் தனியார் நிறுவனங்களில் 40.67 தொன் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்காக ரூபா 379,500 தொகையான வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு முடியுமான போதிலும் உப விதி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதி ஒன்று அங்கீகரிக்கப்பட வேண்டும். | கழிவுப் பொருள்களை சேகரிப்பதற்கு உப விதி ஒன்று உரித்தாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறன்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| புதிய நூலக கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக 2018 பெப்ரவரி 01 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு முற்பணமாக ரூபா 12 இலட்சம் மற்றும் மாதாந்தம் ரூபா 100,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. நூலகத்துக்கு பொருத்தமான சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் நடவடிக்கை எடுத்திருந்தமையால் வாசகர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்ததுடன் பயனைப் பெற்றுக் கொள்வதற்கும் முடியாதிருந்தது. | நூலகத்தை ஸ்தாபிக்கும் போது பொருத்தமான சுற்றாடல் ஒன்றும், வாசகர்களுக்கான பாதுகாப்பு தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். | தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் அவதானிப்பு மற்றும் பரிந்துரையின் பிரகாரம் அந்த கட்டிடம் பெறுகை குழுவினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் பின்னர் தெரிவு செய்யப்பட்டிருந்தது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 8 வெற்றிடங்கள் காணப்பட்டன. | தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றோம். வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது அதற்காக வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சேவையை விட்டுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய விழா மற்றும் விசேட கடன் மீதி ரூபா 39,950 ஆகும். | கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல வருட காலமாக கொண்டு வரப்படுகின்ற அறவிடப்படாத கடன் மீதியை பதிவழிப்பதற்கு 2020 பெப்ரவரி 07 ஆம் திகதிய கடிதம் மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் இடம் மாற்றலாகி சென்ற மூன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 13,896 தொகையான கடன் மீதியில் ரூபா 11,191 தொகை தவணைப்பணமாக அறவிடப்பட்டிருந்த போதிலும் அறவிடப்பட வேண்டிய மீதியாக காணப்பட்டது. | கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி மோசடி தொடர்பாக நுகேகொட நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்ட போதும் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை. |
| (ஈ) | வேலை நீக்கத்துக்கு உட்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 79,868 தொகையான மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கடன்காரர்களிடம் இருந்து கடனை செலுத்தாத சந்தர்ப்பங்களில் பிணையாளர்களிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களின் கடன் மீதியை பிணையாளரிடம் இருந்து அறவிடப்படும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறன்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் உத்தரவாத காலத்தை விஞ்சுவதற்கு முன் 289 மின்குமிழ்களில் 189 மின்குமிழ்களை மாற்றிப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | உத்தரவாத காலம் முடிவடைவற்கு முன் சேவையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மின்குமிழ்களை வழங்குமாறு கோரப்பட்டிருந்ததுடன் இது வரையில் 100 மின்குமிழ்கள் மாத்திரம் ஓட்டெக் நிறுவனத்தில் இருந்து பெறப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் மிகுதி மின்குமிழ்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 373,637 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என 15 விடயங்கள் மற்றும் ரூபா 5,204,020 பெறுமதியான 02 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மினி கம்பெக்டர் வாகனத்திற்கு புதிதாக தாங்கியொன்று மற்றும் புதிய செசியொன்றை பொருத்துவதற்காக ரூபா 1,210,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பொருத்தப்பட்டிருந்த தாங்கி விலக்கப்பட்டு அமைக்கப்பட்ட பழைய தாங்கிக்கிடையே கழற்றி அகற்றப்பட்ட தாங்கி 2020 மே 18 ஆம் திகதி வரையிலும் கராஜிற்கு மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | வேலை மற்றும் சேவைகளை விரைவாகவும் வினைத்திறனாகவும் உரிய நியமங்களுடன் பாதுகாப்பாக நிறைவேற்ற வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் ரூபா 1,210,000 செலவில் இந்த பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பழைய தாங்கியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |